


- வாழ்வோம்



மும்முரமாக மொழிக் கொள்கை!

த.வெ.க. அரசு தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பேற்ற நான்கு மாத காலத்துக்குள், தமிழ்நாட்டின் இறையாண்மை அனைத்தையும் காற்றில் பறக்க விட்டுக்கொண்டிருக்கிறது. குறிப்பாக, இந்தித் திணிப்புக்கு எதிராக வீரம் செறிந்த போராட்டங்களைக் கண்ட தமிழ்நாட்டில், சத்தமில்லாமல் இந்தியைத் திணித்துக்கொண்டிருப்பது, அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டில் தமிழ் - ஆங்கிலம் என இரு மொழிக் கொள்கையை நிலைநாட்டினார், பேரறிஞர் அண்ணா. 1967 முதல் கடைப்பிடிக்கப்பட்டு வந்த கொள்கையை ஆட்சிக்கு வந்த நான்கு மாதங்களில் கைவிட்டுள்ளது, த.வெ.க. அரசு.

சமீபத்தில், தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் - நெடுங்குளம் இடையே மாநில நெடுஞ்சாலையில் நிறுவப்பட்ட புதிய வழிகாட்டிப் பலகையில், இந்தி இடம்பெற்று சர்ச்சையான நிலையில், அது தொடர்பாக அதிகாரிகளைப் பணி நீக்கம் செய்து நடவடிக்கை எடுத்ததாகக் கூறினர். இந்த நிலையில், சென்னை அண்ணா நகர் அருகே வழிகாட்டிப் பலகையில் இந்தி இடம்பெற்றுள்ளதும் சர்ச்சையானது.

இதன் தொடர்ச்சியாக கரூர், கோவை மாவட்டத்தில்.. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு மருந்து, மாத்திரைகள் அளிக்கப்படும் உறையில் இந்தி எழுத்துகள் அச்சிடப்பட்டுள்ளன.`மாநில அரசு இரு மொழிக் கொள்கையைக் கடைப்பிடித்துவரும் நிலையில், மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஒவ்வொரு துறையும் எந்தக் கொள்கை முடிவின்படி இந்தியைப் பயன்படுத்துகின்றன?' என மக்கள் கேள்வி எழுப்பத் தொடங்கியுள்ளனர். இந்தப் போக்கு, இரு மொழிக் கொள்கையை, மாநில அரசு கைவிடுகிறது என்பதற்கான அடையாளம். எதையும் வெளிப்படையாகச் செய்யாமல், குறுக்கு வழியில் ஆட்சி செய்யலாம் எனும் பா.ஜ.க. போலவே த.வெ.க. இயங்கிக்கொண்டிருக்கிறது. பா.ஜ.க. ஆளும் மாநிலங்களைவிட, அதிவேகமாக தமிழ்நாட்டில் பா.ஜ.க. ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது. மக்கள் விழித்துக்கொள்ளட்டும்!

ஃப்ளாஷ்பேக்





த.இரா.தங்கதுரை

இல்லம் வந்த தலைவர்!

1969-ஆம் ஆண்டில், முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சரான பின்னர், கழக நிகழ்ச்சிகளுக்கு பொள்ளாச்சி வருகைதந்தபோது, எங்களது இல்லத்துக்கும் வந்திருந்தார். என் தாத்தா 'திராவிடன்' இரா.தனகோபாலன் அவர்கள், ஒருங்கிணைந்த கோவை மாவட்ட செயற்குழு உறுப்பினராக இருந்தவர். பொள்ளாச்சி நகரப் பகுதியில் கழகத்தை வளர்த்த முன்னோடி. எங்கள் இல்லத்துக்கு தலைவர் அவர்கள் வருகைதந்தபோது, என் தாத்தாவும் பாட்டி த.சரஸ்வதியும் தலைவருக்குப் பணமாலை அணிவித்து வரவேற்றுள் ளனர்.

- த.இரா.தங்கதுரை,
முன்னாள் மாணவர் அணி அமைப்பாளர்,
பொள்ளாச்சி, கோவை தெற்கு.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

கலையின் வழியாகக் கருத்தியல் விளக்கம்!



03



கொரோனா பேரிடர் காலத்தில், இந்தியாவில் சில இடங்களில் கொத்துக் கொத்தாக மனிதப் பிணங்கள் எரியூட்டப்பட்ட காட்சி, உலக மக்களின் உள்ளங்களை உலுக்கியது. அதன்பிறகு, அதைவிடக் கொடூரமாக, உலக மக்களின் உள்ளத்தை உலுக்கிய படங்கள் என்றால், அது காலாவில் எடுக்கப்பட்டவைதான். சின்னஞ்சிறு குழந்தைகளின் முகத்தைத் துளைத்த குண்டுகளால் ஏற்பட்ட காயங்கள், கொடும் போரினால் ஏற்பட்ட பஞ்சத்தால் பசியில் முகம் வற்றி - வயிறு உப்பி 10 வயது குழந்தைகூட 80 வயது முதியவரைப் போல தோல் சுருங்கி, காட்சி அளித்த படங்கள், யாராவது உணவு கொடுப்பார்களா என்று வீதியில் பாத்திரங்களோடு ஏக்கத்துடன் தவித்து நின்ற குழந்தைகள், கொட்டிக்கிடந்த கட்டடக் குவியலுக்குள் புகைபடிந்த முகங்களுடன் கண்ணீர் மல்க எட்டிப்பார்த்த குழந்தைகள், 'லாஞ்சர்'களுக்கு இரையாகி, சடலமாகக் கிடந்த குழந்தையை அள்ளி அணைத்துக் கதறி அழுத பெற்றோர் எனக் கடந்த ஆண்டு முழுவதும் கோரப் படங்கள் வந்துகொண்டே இருந்தன. அந்தப் படங்கள் ஒவ்வொன்றும் ஏற்படுத்திய ரணங்கள் கொஞ்சநஞ்சமல்ல. பாலஸ்தீனத்தின் அந்த நிலையைக் கண்டு மனம் நோகாதவர்கள் எவரும் இருக்க முடியாது.

இந்தப் போரினால், 2025 டிசம்பருக்குள் காஸாவில் ஏற்பட்ட உயிரிழப்புகளின் எண்ணிக்கை 70,942. காயமடைந்தோரின் எண்ணிக்கை 1,71,195. அப்போதைய செயற்கைக்கோள் மதிப்பீட்டின்படி, அந்நாட்டின் வரைபடத்தில் 81% கட்டடங்கள் சேதமடைந்திருந்தன. பள்ளிகள், மருத்துவமனைகள், குடியிருப்புகள், விளைநிலங்கள் என எதுவும் இஸ்ரேலின் குண்டுகளுக்குத் தப்பவில்லை. இஸ்ரேலின் இந்தக் கோரத்தை உலக நாடுகள் பலவும் கண்டித்தன. ஆனால், இந்திய பிரதமருக்கு இஸ்ரேலைக் கண்டிக்க துணிச்சல் வரவில்லை. த.வெ.க. ஆட்சியில், சட்டமன்றத்தில் பா.ஜ.க.வைப் பற்றி யாராவது பேசினால், பயந்துபோய் அவைக்குறிப்பில் இருந்து நீக்கியது போல, இஸ்ரேலைக் கண்டு மோடி அரசு அஞ்சிக்கொண்டிருந்தது.

'இப்போரில் இந்தியா நடுநிலை வகிக்கும்' என்று சப்பைக்கட்டு கட்டினார்கள். ஆனால் இந்தியாவின் தென்கோடியில், தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், இஸ்ரேலைக் கண்டித்தார். காஸாவில் நடப்பது இனப்படுகொலை, இஸ்ரேலின் இக்கொடுஞ்செயலை உடனடியாக நிறுத்த வேண்டுமென்று குரல்கொடுத்தார். 08.10.2025 அன்று, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, சென்னையில் நடத்திய ஆர்ப்பாட்டத்திலும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் கலந்துகொண்டு இஸ்ரேலுக்கு எதிர்ப்பு தெரிவித்தார்.

இஸ்ரேல் அரசை எதிர்ப்பது என்பது, அதன் பாசிச சித்தாந்தத்தை எதிர்ப்பது, யூதர்களின் அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்ட பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டுவது. இப்படி பாலஸ்தீனியர்களுக்கும் காஷ்மீரிகளுக்கும் குரல் எழுப்ப, 'சராசரி அரசியல் கட்சிகள்' ஒருபோதும் துணியாது. அப்படித் துணியும் கட்சி, ஒருபோதும் 'சராசரி அரசியல் கட்சியாக இருக்காது. இந்தியாவில் இதைச் செய்கிற துணிச்சல்மிக்க மாநிலக் கட்சியாக எப்போதும் தன்னை அடையாளப்படுத்திக்கொள்ளும் மாநிலக் கட்சி, தி.மு.கழகம் தான். காரணம், அதன் மரபணுவே அப்படித்தான் வடிவமைக்கப் பட்டிருக்கிறது. அதற்குக் காரணம், பேரறிஞர் அண்ணா. காஸாவிலோ, உக்ரைனிலோ எங்கு போர் நடந்தாலும் அதை உடனுக்குடன் தெரிந்துகொள்ளும் தொழில்நுட்பங்கள் இன்று இருக்கின்றன. நொடிப்பொழுதில் செய்திகளில் வந்துவிடுகிறது. ஆனால், பத்திரிகைகள் மட்டுமே ஊடகமாக இருந்த அந்தக் காலத்திலேயே இத்தகைய சர்வதேச செய்திகளையும் தன் தொண்டர்களுக்குக் கொண்டுசேர்த்தவர் அண்ணா. அவற்றை வெறும் செய்திகளாக மட்டும் அல்லாமல், கோணங்களாகவும் அதைப் புரிய வைத்தார்.

அதற்கு நல்ல உதாரணம், 'ரோம் எரிகிறது' நாடகம். 25-7-1943 அன்று 'திராவிட நாடு' இதழில் வெளியான இந்த நாடகம், வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு, ஹிட்லர்-முசோலினி உரையாடுவது போல கற்பனையாக உருவாக்கப்பட்டது. 1943-ஆம் ஆண்டு ஜூலை 9-10-இல் நேச நாட்டுப் படைகள் இத்தாலி நாட்டின் சிசிலி, ரோமைத் தாக்கின; இத்தாலி-ஜெர்மன் படைகள் பின்வாங்கின. ரோம் மீது மட்டும் சுமார் 1,000 டன் குண்டுகள் வீசப்பட்டன. குண்டுவீச்சுக்கு ஆறு நாட்களுக்குப் பிறகு (ஜூலை 25, 1943) முசோலினி பதவி நீக்கப்பட்டு, கைதுசெய்யப்பட்டார். முசோலினி கைதுசெய்யப்பட்ட நாளில்தான் இந்த நாடகமும் பிரசுரமாகி இருந்தது. "அழிவு அவனை அணைத்துக் கொள்ள அருகே நெருங்கிவந்த வண்ணமிருக்கிறது" என முசோலினியின் வீழ்ச்சியை மையக்கருவாகக் கொண்டு இந்த நாடகத்தை எழுதினார் அண்ணா.

'முசோலினி: அடால்ஃப்! அழிவு வெள்ளம் அணையை உடைத்துக்கொண்டு பாய்ந்தோடி வருகிறதே. சிசிலியிலே முக்கியமான தளங்கள் போய்விட்டனவே; பொல்லாத பிரிட்டிஷ் படைகள், புற்றை விட்டுக் கிளம்பிய நாகமெனச் சீறுகிறதே.

ஹிட்லர்: ஆமாம். சீற்றத்தைக் கண்டுதான் நான் சிந்தாகுலனாகிவிட்டேன், பிடிக்கப்போனேன். சிக்கிக்கொண்டேன்.

முசோலினி: என்னப்பா இது. நீ எந்த விஷயத்தைப் பற்றிப் பேசுகிறாய்?

ஹிட்லர்: ஏன், ஒரெல் போர்முனையைப் பற்றித்தான். அங்கு நமது படை ரஷியப் படையை நிர்மூலப்படுத்தும் என்று நினைத்தேன். இப்போதுள்ள நிலைமையோ, ஜெர்மன் படைகள் வளைத்துக் கொள்ளப்படுமோ என்று திகில் தருகிறது.

முசோலினி: என்னப்பா நீ, உன் குறையைச் சொல்கிறாய். நான் அதையா கேட்டேன்? ஆப்பிரிக்காவிலே என் சாம்ராஜ்ஜியம் சிதைந்துவிட்டது. அத்தோடு சனியன் தொலையட்டும் என்றிருந்தேன். இப்போது சிசிலியில் விழுகிற அடி, இத்தாலியைச் சிதைக்கிறதே.

என ஹிட்லரும் முசோலினியும் உரையாடுவது போல, இருவரின் வீழ்ச்சியையும் நாடகமாக எழுதினார் அண்ணா. இந்நாடகம் அன்றையப் போரை மட்டும் விவரிக்கவில்லை. அவர்களை எதிர்ப்பதற்குக் காரணமான அவர்களின் கருத்தியலையும் வெளிப்படுத்தியது. முசோலினியின் ஆட்சிமுறை, வன்முறை மற்றும் அதிகாரக் குவிப்பை மையப்படுத்திய பாசிச சர்வாதிகாரத்தைத் திணித்தது. ஹிட்லரின் நாசிசமோ, யூதர்களின்மீது வெறுப்பைக் கக்கியது. இந்த இரண்டில் இருந்தும் பல கூறுகளை, பாசிசம் - நாசிசத்தின் இந்திய வடிவமான ஆர்.எஸ்.எஸ். தழுவிக் கொண்டது. இவற்றுக்கு நேரெதிரான சோசலிசக் கொள்கைகளை பெரியாரும் அண்ணாவும் முன்வைத்தனர். அதனால்தான் ஹிட்லர், முசோலினியின் வீழ்ச்சியைத் தனது தொண்டர்களுக்கும் நாடகமாகக் கடத்தினார் அண்ணா. கடினமான கருத்தியலையும் கலை வடிவில் எளிமையாக எல்லோருக்கும் கொண்டுசேர்த்த அண்ணாவின் உத்தி, தமிழ்நாட்டு அரசியல் களத்துக்கு அன்றைக்கு புதிய பாணி.

எந்தவொரு விவகாரத்திலும் செய்திகளைக் கொண்டுசேர்ப்பதைவிட, அவற்றின் கோணங்களையும் விளக்குவது அவசியம். அதைச் செய்தவர்களில் என்றும் தனித்துவ மானவர் அண்ணா. அதுவும் கருத்தியல் ரீதியான கோணங்களைக் கலையின் ஊடாகக் கட்டமைத்த அரசியல் தலைவராக மிளிர்ந்தவர் அண்ணா. அதனால்தான் பாலஸ்தீனமோ காஷ்மீரோ, இன்றும் உறுதியாக அவர்களுக்காக நிற்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம்.

...தொடரும்

ர.பிரகாசு

தெரிந்து கொள்வோம்

1947 கலைஞருக்கு `கலைஞர்' எனும் பட்டத்தை வழங்கினார் எம்.ஆர்.ராதா.

1956 திருச்சி 2- வது மாநில மாநாட்டில் `மே தினம்` விடுமுறை தீர்மானம்.

1957 நாடாளுமன்றத்திலும் கழகத்தின் குரல் ஒலிக்கத் தொடங்கியது.

1957 `ரூபாய் பைசா நாணய முறை' இந்தியாவில் அறிமுகம்.

1957 அறிவகத்தில் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களின் முதல் கூட்டம்.

1958 பெங்களூருவில் கர்நாடக மாநிலக் கழகத்தின் மாநாடு.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900